*17 மார்ச் 2017*

## அரசியலமைப்பு சீர்த்திருத்த செயன்முறையை மீளத்தொடர்தல் - சிவில் சமூக அறிக்கை

*அரசியலமைப்பு வரைவு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை அரசியலமைப்புச் சபையில் விவாதத்துக்காக சமர்ப்பிக்கும் நடவடிக்கை ஜனவரியில் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதை அடுத்து அரசியலமைப்புச் சீர்த்திருத்தச் செயன்முறைகள் ஒரு தேக்கநிலைக்கு வந்து இப்போது இரு மாதங்கள் கடந்துவிட்டன. பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழு, அரசியலமைப்புச் சபையின் உப – குழுக்கள் மற்றும் வழிநடத்தல் குழுவின் பணிகள் உட்பட கணிசமான பணிகள் 2015ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. ஆனால், 2017ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படாதிருந்து வருகின்றமை பெரும் வேதனைத் தருகிறது.*

*2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்கும் தேசிய ஐக்கிய அரசாங்கம் அமைக்கப்பட்டதற்கும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தம் முக்கியமான நியாயப்பாடாகும். தற்போது நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அமைந்திருக்கின்ற விதமும் நீண்டகாலமாக தேவைப்படுகின்ற அரசியலமைப்பு சீர்த்திருத்தங்கள் வேண்டிநிற்கின்ற அரசியல் கருத்தொருமிப்பை கட்டியெழுப்புவதற்கு மிகவும் இசைவானதாக இருக்கிறது. அதனால், அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கின்ற தற்போதைய வாய்ப்புகளை (இருக்கின்ற வாய்ப்புகள் அருகிக்கொண்டு போகின்றன) பாழாக்குவது பாரதூரமான வரலாற்று விளைவுகளைக் கொண்டுவரக்கூடிய ஒரு தவறாகும். இந்த வாய்ப்புகள் தவறவிடப்படுமேயானால், நிறைவேற்று அதிகாரக்குவிப்பையும் மேலாதிக்கத்தையும் குறைப்பதற்கும் நாடாளுமன்றத்தின் வகிபாகத்தை மேம்படுத்துவதற்கும் அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை வலுப்படுத்துவதற்கும் பிராந்தியங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கம் செய்தல் மற்றும் மத்தியில் அதிகாரத்தைப் பகிர்வதற்கும் இன்னொரு வாய்ப்பை நாம் குறைந்தபட்சம் ஒரு தலைமுறைக்குப் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லாமல் போகும்.*

*ஜனநாயகத்தையும் அரசியலமைப்பு வழியிலான ஆட்சிமுறையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கும் பலம்பொருந்தியதும் உறுதிப்பாடு நிறைந்ததுமான ஐக்கியப்பட்ட சமாதான இலங்கையொன்றுக்கான அத்திபாரங்களை மீள போடுவதற்கும் இந்த சீர்த்திருத்தங்கள் கடுமையாகத் தேவைப்படுகின்றன.*

*இந்த அடிப்படைச் சீர்த்திருத்தங்களை செய்வதற்கும் புதியதொரு அரசியலமைப்பு தேவைப்படுகிறது என்பது தெளிவானது. துண்டுதுண்டாக செய்யப்படக்கூடிய சீர்த்திருத்தங்கள் எதுவிதத்திலும் போதுமானவையல்ல. புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று தேவைப்படுகிறது என்ற யதார்த்த நிலை அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்களை முன்னெடுக்கும் பணியின் கனதியை உணர்த்துவதாக இருக்கிறது. அரசாங்கம் அதன் இருப்புக்காக சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றிபெற வேண்டும்.*

*அரசியலமைப்புச் சீர்த்திருத்தச் செயன்முறைகள் சுலபமான பணி என்று நாம் கருதவில்லை. சகலரதும் ஒத்துழைப்பு இருந்தாலும் கூட, அரசியலமைப்பு உருவாக்கம் என்பது சிக்கலான கேள்விகளையும் முரண்பாடுகளையும் பற்றிய பேச்சுவார்த்தைகளுடன் சம்பந்தப்பட்டதாகும். அதனால், அரசியலமைப்புச் சபையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதை நோக்கிய முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது. இந்தச் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதியும் பிரதமரும் தீர்க்கமான தலைமைத்துவத்தை வழங்கவேண்டும். முதற்படியாக, புதிய அரசியலமைப்பு வரைபை வழிநடத்தக்கூடிய பொதுவான கோட்பாடுகளை தெளிவுபடுத்தும் இடைக்கால அறிக்கை பூர்த்தி செய்யப்படுவதை அவர்கள் இருவரும் உறுதிசெய்ய வேண்டும். இந்த இடைக்கால அறிக்கை அரசியலமைப்புச் சபையினால் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் கடும் முயற்சியுடன் முன்னெடுக்கப்பட வேண்டியதாக இருக்கும் அரசியலமைப்பு வரைவுப் பணியை தொடங்கக்கூடியதாக இருக்கும்.*

*உத்தியோகபூர்மான செயன்முறைகளை மீள ஆரம்பிப்பதுடன் சேர்த்து அரசாங்கம் அவரசமாகக் கவனிக்க வேண்டிய விடயங்களும் இருக்கின்றன. அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் தொடர்பில் அரசியல் தொடர்பாடலுக்கான தந்திரோபாயமொன்றை வகுத்து நடைமுறைப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமானதொரு பணியாகும். அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் தொடர்பில் பேசப்படுகின்ற விவகாரங்கள் குறித்து இலங்கை மக்களில் பெரும் பகுதியினர் எந்தவிதமான விழிப்புணர்வும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பது தாராளமாகத் தெரிகிறது. சீர்திருத்தச் செயன்முறைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்கு அப்பால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற செயற்பாடுகள் பற்றி எந்தளவுக்கு அறிந்துகொண்டுள்ளார்கள் என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இது மக்கள் மத்தியில் அக்கறையற்றதொரு நிலை உருவாகவும் சீர்திருத்தங்களுக்கு எதிரான சக்திகள் அரசியல் விவாதங்களை தங்கள் கட்டுப்பாட்டில் எடுப்பதற்கும் வழிவகுக்கிறது. இந்த சக்திகள் மீண்டும் அணிதிரள்வது அபாயகரமான ஒன்றாக இருக்கிறது. இவர்களை வெற்றி பெற அனுமதித்தால் நாடு பல தசாப்தங்களுக்கு சமூக, அரசியல், பொருளாதார மற்றும் அரசியலமைப்பு முன்னேற்றங்களில் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படும். இது விடயத்தில் நிலைவரங்ளை தனது கட்டுப்பாட்டின் கீழ் மீளக்கொண்டுவருவதற்கு அரசாங்கம் விரைந்து செயற்பட்டு அரசியலமைப்பு மீதான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு அனுகூலமான சூழ்நிலையை உறுதிசெய்யவேண்டும்.*

*அரசாங்கத்தின் செயற்திட்டத்தின் பின்னால் தங்களது கட்சிகள் முழுமையாக நிற்பதையும் அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் சகல உறுப்பினர்களும் ஒரே குரலில் பேசுவதையும் உறுதிசெய்வதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து பாடுபடவேண்டும். புதிய அரசிலமைப்பைக் கொண்டுவரும் வரலாற்று முக்கியத்துவ நோக்கம் நிறைவேறும் வரையாவது ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கமாக அவர்கள் செயற்படவேண்டும். மேற்கூறப்பட்ட அரசியல் சீர்த்திருத்தங்களை தேசிய ஐக்கிய அரசாங்கம் உறுதிசெய்யும் என்ற நம்பிக்கையிலேயே சிவில் சமூகம் 2015 தேர்தல் மாற்றங்களை ஆதரித்தது. புதிய அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவருவதற்கானதொரு செயன்முறையில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறோம். ஆனால், நம்பிக்கையுணர்வை ஏற்படுத்தி செயன்முறைகளுக்கு உத்வேகம் அளிப்பதில் ஜனாதிபதியும் பிரதமரும் அரசியல் துணிவாற்றலை வெளிக்காட்டவேண்டிய தருணம் இதுவாகும்.*

## அமைப்புகள்

1. *போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அமைப்பு*
2. *மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்*
3. *காணாமல்போனோரின் குடும்பத்தினர்*
4. *மனித அபிவிருத்தி நிறுவனம்*
5. *இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (*International Centre for Ethnic Studies*)*
6. *ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள்*
7. *தேசிய சமாதான பேரவை*
8. *'ரைட்ஸ் நவ்'*
9. *'ரைட் டு லைப்'*
10. *சட்டக்கற்கைளுக்கான தெற்காசிய நிலையம் (*South Asian Centre for Legal Studies*)*
11. *ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நெஷனல், இலங்கை*
12. *பெண்களுக்கான அரசியல் கல்வியகம் (*Women's Political Academy)

**<u>தனிநபர்கள்</u>**

1 பேராசிரியர் எமிரிடஸ் அர்ஜுன அலுவிஹார
2 ஹில்மி அஹமட்
3 பிரஷான் டி விஸர்
4 விஷாகா தர்மதாஸ
5 ஜயந்த தனபால
6 பிலிப் திசாநாயக்க
7 எஸ்.சி.சி. இலங்கோவன்
8 பிரிட்டோ பெர்ணான்டோ
9 கலாநிதி. நிமல்கா பெர்ணாண்டோ
10 பவானி பொன்சேகா (சட்டத்தரணி)
11 நெலும் கமகே (சட்டத்தரணி)
12 பிரியந்த கமகே (சட்டத்தரணி)
13 லுவி ஞானதாசன் (சட்டத்தரணி)
14 மரியோ கோமெஸ்
15 சுதர்ஷன குணவர்தன (சட்டத்தரணி)
16 லயனல் குருகே
17 பேராசிரியர் பர்ஷானா ஹனீபா
18 சஞ்சன ஹத்தொட்டுவ
19 சந்திரா ஜயரத்ன
20 திஸ்ஸ ஜயதிலக்க
21 பேராசிரியர் சித்ரா மௌனகுரு
22 பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா
23 கலாநிதி. தேவநேசன் நேசையா
24 அசோக ஒபேசேகர
25 பேராசிரியர், மானிடவியல், எமிரிடஸ், கனநாத் ஒபேசேகர
26 கலாநிதி ராஜினி ஒபேசேகர
27 ஜெஹான் பெரேரா
28 கலாநிதி. உபதிஸ்ஸ பெதியாகொட
29 வணக்கத்துக்குரிய கலாநிதி. ஜயசிரி பீரிஸ்
30 பேராசிரியர் கமீலா சமரசிங்க
31 கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து
32 பி.பி. சிவபிரகாசம்
33 கலாநிதி. சந்திரகுப்த தேநுவர
34 கலாநிதி. ஏ.சி. விஸ்வலிங்கம்
35 காமினி வியங்கொட
36 தம்மபால விஜயானந்த
37 ஜே.சி. வெலியமுன (சட்டத்தரணி)
38 கலாநிதி. அசங்க வெலிகல
39 கலாநிதி. ஜோ வில்லியம்